# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன்

JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15

**VOLUME - 9 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 9**

**SEPTEMBER 2025 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

இந்த ஜாமக்காரனில் எழதப்பட்ட என் வாழ்வின் சம்பவம். அனேக ஆண்டுகளுக்கு முன் அன்றைய ஜாமக்காரனில் நான் எழுதிய பழைய செய்தியாகும். அதொடு என் **அனுபவங்களையும் திரும்பி பார்க்கிறேன்** என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதி வந்தேன்.

இப்போது இரண்டு தலை முறைகள் கடந்ததால் புதிய பல வாசகர்கள் அந்த பழைய அனுபவ கட்டுரைகளை திரும்ப வெளியிட கேட்டுக்கொண்டபடியால் இந்த மாத ஜாமக்காரனில் தொடங்கி பழைய என் கட்டுரைகளை தொடர்ந்து வெளியிடுவேன் என்று நம்புகிறேன்.

இந்த ஜாமக்காரனில் என் பிறப்பு வளர்ப்பு, **திருமண வாழ்க்கை** ஆகியவற்றை வெளியிடுகிறேன். மீதி கட்டுரையை **அடுத்த மாத** ஜாமக்காரனிலும் வெளியிடுகிறேன்.

வாசகர்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறேன்!. உங்கள் காணிக்கையும், **வைத்திய செலவுக்கான** பண உதவியும் கிடைத்தது. நன்றி.


தொடர்ந்து உங்களுக்காக ஜெபிப்பேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்வின் கிருபை உங்க அனைவரோடும் இருப்பதாக.

– டாக்டர் **புஷ்பராஜ்**

## SEPTEMBER- 2025

# திரும்பிப் பார்க்கிறேன்

## என் திருமணம்



டாக்டர் **புஷ்பராஜ்** & திருமதி **வதனி புஷ்பராஜ்**
1970ம் வருடம் அக்டோபர் மாதம் 9ம் தேதி எங்கள் திருமணம் சேலத்தில் அஸ்தம்பட்டி சி.எஸ்.ஐ. ஆலயத்தில் குருவானவர் Rev. **தேவாசீர்வாதம்** அவர்களால் ஆயுத பூஜை அன்று ராகு காலத்தில் எங்கள் திருமணம் நடந்தது.

குறிப்பு : என் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை என் ஆவிக்குரிய அனுபவங்களை திரும்பிப் பார்க்கிறேன் என்ற தலைப்பில் ஜாமக்காரன் பத்திரிகையில் அவ்வப்போது எழுதிவநதேன். இது திரும்பிப் பார்க்கிறேன் தலைப்பில் நான் எழுதிய 11 வது என் அனுபவமாகும்.அவைகளில் சிலது பிரயோஜனமுள்ளதாக அமைந்தது. சில செய்திகள் பிரயோஜனம் மற்றதாகவும் அமைந்தது.,.

இம்முறை என் வாழ்க்கையில் என்திருமண ஏற்பாட்டின் காலங்களில் நடந்த சமபவங்களை எழுதுகிறேன். இதை சுமார் 13 வருடங்களுக்கு முன் முதன் முதலாக ஜாமக்காரனில் வெளியிட்டேன். ஜாமக்காரன் பத்திரிகையில் வெளிவந்த இந்த அனுபவங்களை தனி புஸ்தகமாக்கி இலவசமாக கேட்பவர்களுக்கு அனுப்பி வந்தேன். இப்போது அச்சடித்த, இந்த புஸ்தகங்கள் அனைத்தும் தீர்ந்துபோயின். ஆகவே மறுபதிப்பாகவும் என் திருமண நாளாகிய 1970 அக்டோபர் 9ஐ ஸ்தோத்திரத்துடம் நன்றியுடனும் நினைவுகூறும் வகையிலும் இந்த ஜாமக்காரனில் வெளியிடுகிறேன்.

இந்த கட்டுரையை வாசிக்கும் யாரும் அதுமட்டுமல்ல இதை வாசிப்பதால் யாரும் ஆவிகுப்குரிய ஜீவியத்தில் **வளரவும் முடியாது.**

பின் ஏன் இப்படி பிரயோஜனமில்லாத இவ்விஷயங்களை எழுதி நேரத்தையும் பணத்தையும் செலவழிக்கிறீர்கள் என்று உங்களில் பலர் கேட்கலாம்.

காரணம் என் பத்திரிகையான **ஜாமக்காரனை** அல்லது **திரும்பி பார்க்கிறேன்** போன்ற என் வாழ்க்கையின் **சொந்த அனுபவங்களையும்** மற்ற **வெளியீடுகளையும்** பொதுமக்கள் அல்லது அவிசுவாசிகள் யாரும் வாசிக்க வினியோகிக்கப்படுவதில்லை.

சந்தா வசூலித்து அனேகர் பலர் வாசிக்கும் வகையில் பத்திரிகை **எண்ணிக்கைகளை கூட்டும்** நோக்கத்துடனும் ஜாமக்காரன் என்ற என் பத்திரிக்கையை நான் வெளியிடுகிறதும் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். ன் ஊழிய காலமுதல் என்னை தங்கள் **ஜெபத்தாலும் காணிக்கைகளாலும்** என்னை தாங்கி எனக்கு உதவிய என் காத்தரால் எனக்கு **கொடுக்கப்பட்ட விசுவாசிகளான** அந்த அன்பு உள்ளங்களுக்காகவே என் பத்திரிக்கையும் மற்ற வெளியீடுகளையும் பிரசுரிக்கிறேன்.

என்னை தாங்குகிறவர்கள் என்னைப்பற்றிய எல்லா விவரஙகளையும் முழுமையாகப அறிய வேண்டும் என்று தனிப்பட்ட முறையில் நான் விரும்புகிறேன். ஆகவே தான் கடந்த என் பாதையில் நடந்த அனுபவங்களை வரிசையாக ஞாபகம் வரும்போதெல்லாம் எழுதிக்கொண்டே வருகிறேன். இது 11வ அனுபவ கட்டுரையாகும்.

முன்பு ஒருமுறை ஜாமக்காரனில் நான் எழுதியபோது என் பழைய அனுபவஙகளை நினைத்து பார்க்கும்போது அதில் ஒரு இனிமை இருக்கத்தான் செய்கிறது என்று எழுதியிருந்தேன்.

ஆனால் இப்போது எழுதியுள்ள என் திருமணஏற்பாட்டின் ஆரம்ப காலங்களை பின்நோக்க பார்க்கும்போது மட்டும் கொஞ்ஜம் அந்த இனிமை குறைகிறதை உணருகிறேன். காரணம் நிகழ்ச்சிகளின் தன்மையானது ஆவிக்குரிய அல்லாத நிலையில் வேதனைக்குரியதாக அமைந்ததுதான்.

நடந்த இந்த நிகழ்ச்சிகளில் சம்மந்தப்பட்டவர்களின் குடும்பத்துக்கோ, நபர்களுக்கோ பாதிப்பு உண்டாகக்கூடாது என்பதற்காக பலவற்றை **மறைத்தும் குறைத்தும்** எழுதினேன், சம்பவங்கள் நடந்து 56 வருடங்கள் கழித்து மறுபதிப்பாக இதை எழுதியுள்ளேன் ஆனால் எதையிம் மிகைபடுத்தியோ பொய்யாகவோ எழுதவில்லை.

நடந்த இந்த சம்பவங்களை இதுவரை இரண்டு பெரிய தமிழ்நாடு ஊழியர்களிடம் மட்டுமே நேரிடையாக பகிர்ந்துகொண்டுள்ளேன். வேரு யாருக்கும் இவ்விஷயங்கள் அறிவிக்கப்படவில்லை.

இந்த விஷயங்கள் ஜாமக்காரன் வாசகர்களுக்கு பிரயோஜனமாக இருக்கிறதோ இல்லையோ, என்னை எதிர்த்து அசிங்கமாக எழுத ஆசைப்படும் குறிப்பிட்ட சில ஊழியர்களுக்கு என் நிகழ்ச்சிகளை எட்டால் பெருக்கி புதிய கண், மூக்கு, வாய்

ஆகியரைவகளை பொருத்தி தங்கள் பத்திரிக்கையில் வெளியிடவாவதுஅவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

சரி இதுவரை கூறிய முகவுரை போதும் என்று நிகைக்கிறேன் இனி எனக்கு நேரிட்ட அனுபவங்களை படிக்க ஆரம்பியுங்கள்.

## ஆரம்பம்:

திருமணம் என்பது ஒருவனுடைய வாழ்க்கை என்ற புஸ்தகத்தில் மிக முக்கியமான அத்தியாயம் ஆகும். சிலருடைய வாழ்ககை திருமணத்திற்குப்பின் புது மாற்றங்களோடு செழித்து மிக சந்தோஷத்தோடு உள்ள வாழ்க்கையாக அமைகிறது.

சிலருடைய வாழ்க்கையில் திருமணம் என்பது இதுவரை தான் அனுபவித்து வந்த சந்தோஷத்தையும் சுதந்திரத்தையும் சுதந்திரத்தையும் இழக்க கெடுத்ததாக அமைகிறது. அப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கைப் பயணம் ஏமாற்றம், சஞ்சலம் துக்கமுகமாக பிரயாணப்பட்டு போகிறது.

நானும் என் மனைவியும் ஆரம்பத்தில் எப்படி சந்தோஷத்தோடு இருந்தோமோ அதைவிட இபபொழுது இதை இரண்டாம் பதிப்பாக எழுதிக்கொண்டிருக்கிற இந்த 2026ம் ஆண்டு வரைக்கும் இந்த 86ம் வயதிலும் நாங்கள் சந்தோஷமாகவும், சமாதானத்துடனும் அமைந்துள்ளது. இனியுள்ள காலங்களிலும் எங்கள்இருவரின் ஆவிக்குரிய ஜீவியத்திலும் குடும்ப வாழ்க்கையிலும் மிக சந்தோஷமாக சமாதானத்துடனும் வாழ்வோம். தொடர்ந்தும் இப்படிே இருப்போம் என்று கர்த்தருக்குள் நம்புகிறோம். எங்களைப்பற்றிய இந்த நல்ல சாட்சி எங்களை காண்பவர்கள் எங்களோடு பழகியவர்கள் எங்கள் உறவினர்கள் ஆகிய பலரும் எங்களை குறித்து கூறும் சாட்சியாகும். நாங்களும் அவ்வாறே மனதிற்குள்ளேயும் வெளியேயும் மிக சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் வாழ்கிறோம் என்று கர்த்தருக்கு முன்பாக கர்த்தருக்குள் பெருமையாக உங்களிடம் கூறிக்கொள்கிறோம்.

இந்த **சமாதானமான எங்கள் வாழ்க்கை** எங்கள் **சாமர்த்தியத்தால் அமைந்ததல்ல** கர்த்தருடைய பெரிய **கிருபையால்** அமைந்ததாகும்.

என் திருமணத்திற்கு முன் என் வாழ்ககையில் நடந்த நிகழ்ச்சிகளையும் அவைகளில் இழைந்து ஓடிய இனிப்பும் கசப்புமான சம்பவங்களையும் முதலாவது இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

## பள்ளிப்பருவம்:

ஒரு ஆணோ பெண்ணோ வாலிப்பருவம் அடைந்த சமயம் இவர்கள் நினைவுகளில்

விசேமாக சரீர உணர்ச்சிகளில் சில குறிப்பிடத்தக்க நிகழச்சிகள் வருவதும் எண்ணங்களில் அல்லது செய்கையில் பல மாற்றங்கள் அமைவதையும் எல்லாரும் அனுபவப்பட்டு இருப்பார்கள்.

இந்த அனுபவங்கள் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் போதோ அல்லது கல்லூரியில் படிக்கும்போதோ ஆரம்பிக்கிறது. சிலருக்கு வளர்ந்த வாலிய வயதில் வேலை பார்க்கும்போது இந்த அனுபவங்கள் ஆரம்பிப்பதும் உண்டு,

என்னை பொறுத்தவரையில் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட இந்த அனுபவங்கள் என் விடலைபருவத்துக்கு முன்பே உயர்நிலைப்பள்ளியிலேயே ஆரம்பித்து விட்டது. விடலை பருவத்துக்கு முன்பே என் வாழ்க்கையில் சில பெண்களை நானே மனதில் காதலியாக கற்பனை செய்துகொண்டு அவர்கள் பின்னால் சுற்றிய அனுபவமும் உண்டு. உண்மையில் அந்த செய்கைகளை நான் விளையாட்டாகத்தான் கருதினேனே தவிர வேறு உள்நோக்கம் கொண்டது அல்ல. அதோடு அவைகளை சரீர பால் உணர்வு Sex உணர்ச்சியான அடிப்படையிலும் உண்டானது இல்லை. ஏதோ ஒரு கிளுகிளுப்பான ஒரு பொழுதுபோக்கு அவ்வளவே.!


பள்ளி பருவம்

அந்தப்பருவத்தில் கூட தனக்கும் ஒரு பெண் சிநேகிதி Girl Friend உண்டு என்று கூறிக்கொள்ள பல வாலிபர்கள் விருப்படுவதுண்டு. அப்படி கூறிக்கொள்வது ஒருதனி தகுதியாகவும் பெருமையாகவும் கூட விடலை பருவத்திலும் வாலிப உலகிலும் கருதப்பட்டது.

அதற்கு நானும் விதிவிலக்கு அல்ல, சேலம் பள்ளியிலிருந்து **திருவண்ணாமலை** என்ற ஊரில் **டேனிஷ் மிஷன்** உயர்நிலை பள்ளியில் விடுதியில் தங்கி படித்தேன் பெண்களும், ஆண்களும் இணைந்து பயிலும் Co-Education உயர் நிலைப்பள்ளியில்தான் நான் எஸ்.எஸ்.எல்.சி வரை படித்தேன். அது பெண்களோடு படித்த முதல் அனுபவமாகும். அப்போது தான் முதல் முதல் என் மனதில் பால் உணர்வு (Sex) கற்பனைகள் வாலிப ஆரம்ப உணர்ச்சிகள் ஆகியவை தோன்ற ஆரம்பித்தன. (அப்போது நான் இரட்சிப்பின்அனுபவத்தை அடையவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்து தொடர்ந்து வாசியுங்கள்)

அந்த நாட்களில் எனக்குள் நான் எப்படி யெல்லாமோ பெண்களைப்பற்றி கற்பனை செய்து கொண்டாலும் திருமணம் என்ற சிந்தையோ கணவன் மனைவி என்ற உறவின் ஆசையோ என் உள்ளத்தில சிறிதும் இடம்பெறவில்லை. எல்லாம் ஒரு விளையாட்டு அல்லது

பொழுதுபோக்கு போல்தான் என்று எண்ணிக்கொண்டேன். சரீர பிரகரமான காம உணர்ச்சியின் தவறான சிந்தனைகள் அந்த குறிப்பிட்ட பள்ளி பருவத்தில் எனக்குள் வந்தது என்றாலும் திருமண சிந்தனைகள் எதுவும் எனக்கு தோன்றவில்லை அதன்பின் பல வருடங்கள் கழித்து தற்காலிக ரயில்வே வேலைக்கு வந்தபின்னும் திருமணம் என்பதைக் குறித்து நான் யோசிக்கவே இல்லை. அந்த எண்ணம் எனக்குள் வரக்கூடிய சூழ்நிலையும் என் வீட்டில் இல்லை. அதற்கு மிக முக்கிய காரணங்களில் ஒன்று என் குடும்பத்தில் உடன் பிறந்த மூத்த சகோதரிகளுக்கெல்லாம் திருமணம் முடிந்த பிறகு தான் என் கல்யாணத்தைப்பற்றி நான் சிந்திக்க முடியும். ஆகவே தான் அந்த நாட்களில் சூழ்நிலையில் எனக்கு திருமண எண்ணமே உண்டாக வழியில்லாமல் போனது.



உயர்நிலைப் பள்ளி மாணவன்

மேலும் எனக்கு பள்ளி படிப்பிலிருந்தே காதலித்து திருமணம் செய்வது தவறு என்ற பயமுள்ள எண்ணம் என்னை அறியாமல் எனக்குள் வேலூன்றி இருந்தது. அந்த எண்ணம் எனக்கு புரியவில்லை அதன்பின் இந்திய ராணுவத்தில் சேர்ந்து AFMC யில் நான் டாக்டராகி அதன்பின் டாக்டர் தொழிலுக்கு வந்த நாட்களில் வலுவில் சில பெண்கள் என்னை நேசிப்பதை நான் அறிந்தும் உள் உணர்வில் இனம் புரியாத பயத்தின் அடிப்படையில் அதை நான் உற்சாகப்படுத்தவில்லை. அந்த காலத்தில் பள்ளி நாட்களில் நான் வெறுமனே கற்பனைக் காதலிகளை மனதிற்குள் உருவாக்கி அலைந்தேன். ஆனால் நான் டாக்டர் வேலைக்கு வந்தபின் மேலே குறிப்பிட்டப்படி என்னை காதலிக்க விரும்பிய பெண்களோடு பழக இயலாதபடி இனம் புரியாத பயம் என்னை தடுத்தது.

அவர்களின் தொடர்பு வளர்ந்து காதலாக மாறிவிடுமோ திருமணம் செய்யும் அளவு அவர்களின் தொடர்பு என்னை கொண்டு போய்விடுமோ என்றும் மிகவும் பயந்தேன். ஆனால் அதே நேரத்தில் என் உள்ளத்தில அந்த பெண்களின் தொடர்பை மறைமுகமாக விரும்பினேன் என்பதை மறுக்கவும் முடியாது.

அந்த காலத்தில் பள்ளி பருவத்தில் திருவண்ணமலையில் பாட்டுப்போட்டியில் முதல் பரிசு வாங்கின ஒரு பெண்ணையும் இரண்டவதாக பரிசு வாங்கின என்னையும் இணைத்து பள்ளி நண்பர்கள் கேலி செய்தார்கள். அப்படி பேசப்படுவதை மானசீகமாக நான் ரசித்தேன். விரும்பினேன், ஏங்கினேன் என்று கூட சொல்லலாம். நண்பர்கள் அப்படி பேசப் பேச அந்த பெண்ணோடு தொடர்பு வைக்க ஆசைப்பட்டேன். இப்படித்தான் **நண்பர்கள் நம்மை**

**கெடுக்கிறார்கள்** என்பதை இப்போது உணர முடிகிறது. ஆனால் அந்த குறிப்பிட்ட பெண்ணோடு தொடர்புக்கொள்ள முடியவில்லை. அவள் என்னை ஒரு பொருட்டாக மதிக்கவும் இல்லை அவள் ஒரு இந்து பிராமணப் பெண்.

## ராணூவ பயிற்சி காலம்


ராணுவத்தில் நான்

ராணுவத்தில் நான் பயிலும்போது இஷ்டம்போல பாவம் செய்யும் சுதந்தரமான பயங்கர சூழ்நிலையில் நான் இருந்தேன். என் ராணுவ நண்பர்கள் பாவம் செய்ய வாரம் ஒருமுறை ராணுவ முகாமைவிட்டு உத்தரவுபெற்று வெளியே போய் திரும்பியஉடன் மருத்துவ பரிசோதனை செய்து கொள்வார்கள். எல்லோரும் வாரா வாரம் அப்படி வெளியே போகும் போது அவர்களோடு நானும் செல்ல என்னை அவர்கள் வற்புறுத்துவார்கள்.

நான் அப்படி விலை மாதுக்களிடம் போகும் அந்த பாவத்தை செய்ய நான் கற்பனையில் ஆசைப்பட்டாலும் அவர்கள் என்னை அழைக்கும்போது விவரிக்க முடியாத பயம் என்னை ஆட்கொண்டு அதன்காரணமாக நான் அந்த பாவம் செய்ய அவர்களோடு **என் கேம்ப்பை** விட்டு வெளியே செல்ல மறுத்துவிடுவேன். அந்த பயந்த சுபாவத்தை கண்ட சிலர் என்னை தவறாக கருதிவிட்டனர். அதனால் என்னை இராணுவத்தில் அலி (Eunch) என்றும் கேலி செய்வார்கள்.

**ஆஸ்பத்திரியில்** வேலை செய்யும் பெண்களும் அவர்களிடமிருந்து நான் விலகி செல்வதால் அவர்களும் என்னை **அலி** என்றே கருதினர். இப்படிப்பட்ட கேலியான எண்ணம் என்னைப்பற்றி அவர்களுக்குள் உண்டானது. ஒருவகையில் நான் அவர்களிடம் பாவம் செய்யாதபடி அவர்கள் வலையில் விழாதபடி என்னை காத்தது என்றும் கூறலாம். அதுவே அந்த கேலியான பெயர் எனக்கு நன்மையான பாதுகாப்பாக அமைந்தது. மருத்துவ நண்பர்கள் சிலர் என்னோடு தவறான யோசனைகளை ஆலோசனையாக பகிர்ந்து கொண்டார்கள். வாழ்க்கையில் சில தவறுகளை பாவத்தை (Sex) அனுபவபூர்வமாக ஆரம்பகாலத்திலேயே அறிந்து கொண்டால் தான் திருமண வாழ்க்கைக்கு அந்த அனுபவம் **மனைவியை** சந்தோஷப்படுத்த உதவியாக இருக்கும் என்று நஞ்சு போன்ற அந்த போதனைகளை என் நண்பர்கள் எனக்கு ஆலோசனையாக தந்ததுண்டு. அந்த போதனையை கேட்டு சில சமயங்களில் நானும் ஆசைப்பட்டு தைரியங்கொண்டு நண்பர்கள் சொன்ன பாவ காரியத்தை செயல்படுத்த பலமுறை முயன்றேன். அனால் அந்த குறிப்பிட்ட பாவ அனுபவத்தின் வாசல் வரை சென்றும் தைரியம் இழந்து பயப்பட்டு திரும்பி வந்த அனுபவமும் எனக்கு உண்டு. இப்படிப்பட்ட அலோசனைகள் தான் இன்று பல கல்லூரி மாணவர்கள் மத்தியில் பேசப்பட்டு

பல வாலிபர்கள் பாவத்தில் விழ காரணமாகிறது. சங்கீதம் ஒன்றை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள் என்று இப்போது என்னால் வாலிபர்களுக்கு ஆலோசனையாக கூறமுடிகிறது.

## இரட்சிக்கப்பட்ட காலம்:

1964 ம் வருஷம் இந்தியாவில் தமிழ்நாட்டில் சேலம் அருகே உள்ள டேனிஷ்பேட்டை என்ற இடத்தில் அமைந்த (Bethel Fellowship) என்ற ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனத்தில் வைத்து என் அன்பின் தெய்வம் தன் காயப்பட்ட கரத்தால் என்னை பிடித்தார். என்னை மாற்றினார். மறுபிறப்பின் அனுபவத்தை எனக்கு அங்குதான் ஆரம்பித்து வைத்தார்.

என் இரட்சிப்பின் அனுபவம் எனக்கு அங்கு தான் ஆரம்பமானது. எப்படி இரட்சிக்கப்பட்டேன் என்பதை வேறொரு கட்டுரையில் எழுதுவேன். அந்தகால இரட்சிப்பின் அனுபவத்தை என் ஒவ்வொரு கூட்டத்திலும் கூறியுள்ளேன்.

இரட்சிக்கப்படாததற்கு முன்பே கர்த்தர் தன் அநாதி தீர்மானத்தால் பெண்கள் விஷயத்தில் சபலம் உள்ளவனாக இருந்தும் எந்த தவறும் பாவமும் செய்யாமல் என்னைக் காப்பாற்றினார் என் இரட்சிப்பின் புதிய வாழ்க்கையிலும் அப்படியே என்னை கண்மணிப்போல பாதுகாத்தார். தொடர்ந்தும் பாதுகாத்துக்கொண்டிருக்கிறார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. இப்படி கூறுவதால் இரட்சிக்கப்பட்டபின் சோதனையோ சபலமோ சலனமோ எனக்கு ஏற்படவில்லையா? என்று கேட்கலாம்.

வந்ததே ! பலமுறை சோதனை வந்ததே! பல ரூபத்திலும் வந்தது.. பல சூழ்நிலையிலும் வந்தது (நான் காதல் வலையில் விழுந்து எழுந்து தப்பித்த விஷயத்தைக்குறித்து ஆவிக்குரிய காதலர்கள் என்ற புஸ்தகத்தில் எழுதியுள்ளேன் அது திரும்பிப் பார்கிகிறேன் No.9ல் வாசிக்கலாம். பலசோதனைகளை **நானே விரும்பினேன்** என்றாலும் எல்லாவற்றிலும் என் கர்த்தரே என்னை காப்பாற்றினார்.

சரியாக கூறினால் இரட்சிக்கப்படாததற்கு முன்பைவிட இரட்சிக்கப்பட்டதற்கு பின்தான் சோதனைகள் எனக்கு அதிகம் வந்தது.

இந்த சோதனையினால் ஆரம்பத்தில் நான் மிகவும் சித்திரவதைப்பட்டேன். சோர்ந்து போனேன் எத்தனையோ இரவுகள் புழுவாக துடித்தேன் சில சமயம் பாவம் செய்து விடுவேனோ என்ற பயத்தில் வாய்விட்டு அழுவேன்.

மற்ற எல்லா தொழிலையும் விட வைத்தியத்தொழிலில் தான் கூடுதல் சோதனைகள் உண்டு. அந்த சோதனைகளில் விழுந்து என் இயேசுவின் மனதை துக்கப்படுத்திவிடுவேனோ என்று பயந்து பலமுறை என் பால் உணர்ச்சிகளை (Sex) அடக்க மாத்திரைகளை சாப்பிட முயற்சித்தேன். ஆனால் அதன்பின் உண்டாகும் பக்க விளைவுகளை நான்

அறிந்திருந்ததாலும் என் திருமண வாழ்க்கையே அது பாதித்து விடும் என்று அறிந்ததாலும் அந்த குறிப்பிட்ட மாத்திரையை உட்கொண்டு (Sex) பால் உணர்ச்சிகளை அவித்துக்கொள்ளும் அல்லது தணித்துக்கொள்ளும் எண்ணத்தை தவிர்த்தேன். அதற்குப்பதில் பலமுறை உபவாசித்து ஜெபித்து அந்த மாமிச உணர்ச்சிகளை அடக்கினேன். உபவாச ஜெபத்தில் தான் அந்த விஷயத்தில் எனக்கு வெற்றி கிடைத்தது. அப்படி இருந்தும் சிலமுறை பாவ உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாதவனாகி கடைசி வரை என் இயேசுவுக்காக பரிசுத்தமாக வாழ முடியாதோ என்று எண்ணி தற்கொலை செய்யவும் யோசித்தேன். கர்த்தரே அந்த தற்கொலை எண்ணத்திலிருந்தும் என்னை தடுத்து ஆட்கொண்டார். இந்த எண்ணம் பாவம் என்று உணர்த்தினார்.

அதன்பின் தான் **பரிசுத்த ஆவியானவரின்** கிருபையால் பரிசுத்தமாக வாழ எனக்குள் சில பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துக்கொண்டேன். ஜெபத்தில் எனக்கும் தேவனுக்கும் உள்ள நெருக்கத்தின் அளவை அடையாளமாக வைத்து ஒவ்வொரு நாளும் காலை மாலை இரண்டு வேளைகளிலும் என்னை தற்சோதனை செய்து என்னை பாதுகாத்துக்கொண்டேன். எனக்குள் என்னை ஆளும் கிறிஸ்து உண்டா என்பதை அடிக்கடி தற்பரிசோதனை செய்து பார்த்துக்கொள்வேன் (யோ 14:16-23).

தேவனோடுள்ள நெருக்கம் குறைந்தால் அல்லது **ஜெபம்** செய்ய வேதம் வாசிக்க ஆசை இல்லாமல போனால் ஏதோ தவறு நடக்கப்போகிறது என்பதற்கான அடையாளமாக அதைக்கருதி உடனே உபவாசித்து அதை சரிபடுத்தி பாவத்தில் வீழாமல் என்னை பாதுகாத்தக்கொள்வேன். தேவனோடுள்ள உறவில் பாதிப்பு உண்டான காரணத்தை ஓரிரு தினங்களுக்குள்ளேயே கண்டுபிடிப்பேன். உடனேயே அதைசரிப்படுத்தி விடுவேன். இப்படியாக எனக்கும் என் தேவனுக்கும் உள்ள தொடர்பு அறுந்து போகாமல் இடைவெளி ஏற்படாமல் பார்த்துக்கொண்டேன்.

என்னை நான் எப்படிப்பாதுகாத்துக் கொண்டேன் என்பதற்கு ஒரு நிகழ்ச்சியை உதாரணமாக இங்கு குறிப்பிட ஆசைப்படுகிறேன். அனேகருக்கு குறிப்பாக வாலிபர்களுக்கு அது பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இரட்சிக்கப்பட்ட புதிதில் எனக்கு ஆவிக்குரிய ஆலோசனை கொடுக்கவும் ஜெபத்தில் எனக்கு உதவவும் நான்கு குடும்பங்களை கர்த்தர் எனக்கு வைத்திருந்தார். இந்த நான்கு குடும்பங்களும் அடிக்கடி எனக்கு நல்ல ஆலோசனைகளை கொடுத்தார்கள். வாரா வாரம் அவர்களுடைய வீடுகளுக்கு நான் செல்வேன். அவர்களோடு சேர்ந்து ஜெபிப்பேன். அந்த ஐக்கியம் என் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருந்தது.

சில மாதங்களுக்கு பிறகு ஒருநாள் என் தனிப்பட்ட ஜெபத்தில் ஏதோ குறையை கண்டேன். ஒவ்வொரு நாளும் **ஜெபத்தை வேகமாக** முடித்துக்கொள்ள ஆசைப்பட்டேன்.

ஆசையோடு ஜெபிக்காமல் **கடமைக்காக** ஜெபிப்பது போல உற்சாகமிழந்து ஜெபித்தேன். வழக்கமாக ஜெபத்தில் உண்டாகும் **இன்ப சந்தோஷம்** இரண்டு நாட்களாக இல்லை ஆகவே என் வழகத்தின் படி என் தனி ஜெபத்தில் ஏன் உற்சாகம் இழந்தேன் என்பதற்கான காரணத்தை கண்டுபிடிக்க உடனே நான் முயற்சித்தேன்.

அன்று வேலைக்கு செல்லாமல் வீட்டில் தனியாக உபவாசித்து எதிலாவது நான் கர்த்தரைவிட்டு விலகியிருக்கிறேனா என்ற ஆராய்ந்தேன். எங்காவது பாவம் செய்தேனா? என்று யோசித்தேன். ஆகவே நான் வழக்கமாக செல்லும் இடம், பழகும் நண்பர்கள் ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றாக ஆராய்ந்தேன். நான் வழமையாக சென்று வரும் ஒவ்வொரு இடத்தையும் ஆராய்ந்தேன். ஆஸ்பத்திரியில் தவறு நடக்கவில்லை!. வேறு எங்கும் தவறு நடக்கிவில்லை! எப்படியெல்லாம் என்னை ஆராய்ந்து பாவத்தை அல்லது தவறை கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படியிருக்கும் போது என் ஜெபத்தில் உற்சாகமில்லாதற்கு காரணம் என்ன? முடிவாக மறுபடியும் ஒருமுறை நான் போய்வரும் இடங்களைக் குறித்து ஆராய்ந்தேன். இப்போதுதான் நான் ஜெபிக்கசென்ற வீடுகளை குறித்து ஆராயத் தொடங்கினேன். அந்த குறிப்பிட்ட நான்கு வீடுகளிலும் நான் எந்த தவறும் செய்யவில்லை. பின் ஜெபத்தின் தடைக்கு என்னதான் காரணம்?. மறுபடியும் மறுபடியும் அந்த வீடுகளையே யோசித்து ஆராய்ந்தேன். கடைசியாக தடையின் காரணத்தை கண்டுபிடித்து விட்டேன்.!

எல்லா வீடுகளுக்கும் ஜெபத்துக்காக செல்லுகிறேன். ஆனால் ஒரு குறிப்பிட்ட வீட்டிற்கு ஜெபத்துக்காக ஆலோசனைக்காக செல்லும்போது மற்ற வீட்டாரோடு பேசுகிறது போலல்லாமல் அந்த குறிப்பிட்ட வீட்டில் உள்ளவர்களோடு மட்டும் **அதிக நேரம்** அவர்களோடு பேச என்னை அறியாமல் ஆவல் கொண்டதை உணர்ந்தேன். ஆனல் உள்ளத்தில் சரீரத்தில் தவறு ஒன்றும் ஏற்படவில்லை. இந்த வீட்டில் உள்ளவர்கள் யாரும் தவறான எண்ணத்தோடு என்னிடம் பழகவில்லை என்றாலும் மற்ற குடும்பங்களோடு ஒப்பிடும்போது இந்த குறிப்பிட்ட வீட்டாரோடு மட்டும் மற்றவரைவிட அதிக நேரம் பேச ஆசைப்பட்டதும் அதிகநேரம் அவர்களோடு செலவழிக்க இஷ்டப்படுவதும், அரட்டை அடிப்பதும் அதிகம் **சிரித்து சிரித்து பேசி நெருங்கி பழக ஆசைப்பட்டதும் ஏன் ?** அதுதான் பாவம் உண்டாவதற்கு ஆரம்ப சூழ்நிலையும் ஆஸ்திபாரமுமாகும் என்பதை உணர்ந்துகொண்டேன். உடனே அந்த வீட்டுக்கு போவதை மட்டும் நிறுத்தினேன். என் உள்ளத்தில் பல உணர்ச்சி உண்டாக்கும் அந்த வீட்டுக்கு இனி போக மாட்டேன் என்று முடிவு செய்தேன். இந்த தீர்மானத்தை எனக்குள் செய்த உடனேயே இழந்த ஜெப சந்தோஷத்தை திரும்ப பெற்றுக்கொண்டேன், அந்த ஜெபம் எத்தனை சந்தோஷமாக, சக்தியாக மாறியது தெரியுமா ? அதன்பிறகு அந்த வீட்டுக்கு செல்லாததின் காரணத்தை குறிப்பிட்ட அந்த வீட்டில் குடும்ப தலைவர்களோடு ஒரு நாள் நேரில் சந்தித்தபோது

பகிர்ந்துகொண்டேன். அவர்கள் உண்மையான விசுவாசிகளானதால் நான் கூறியதை தவறாக எடுக்காதபடி அதை வரவேற்றார்கள். வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னை காத்துகொள்ளுகிறதினாலே தானே (சங். 119:9)

இப்படியாக என் ஆரம்ப நாட்கள் சோதனை உள்ள இடங்களுக்கு போவதை நிறுத்தியும் சிலரோடு பேசினால் நான் விழுந்து விடுவேன் அல்லது அவர்களை பார்ப்பதால் மனதில் சலனம் ஏற்படுகிறது என்ற எண்ணம் எனக்குள் வரும்போது அப்படிப்பட்டவர்களோடு பேசுவதையும் தொடர்பு கொள்ளுவதையும் நிறுத்தி இவ்விதமாய் என்னை பாதுகாத்துக்கொள்ள ஆவியானவர் எனக்கு உதவி செய்தார். என்றாலும் சோதனைக்காரன் புதுப்புது ரூபத்தில் என்னை தொடர்ந்து தேடி வந்தான்.

கர்த்தரோ என்னை பிசாசின் எந்த வலையிலும் விழ என்னை அனுமதிக்காமல் காத்துக்கொண்டு வந்தார். அதன்பின் நடந்த பல நிகழ்ச்சிகளையும், என்னை என் ஆஸ்பத்திரியில் தேடிவந்த சோதனைகளையும் **திரும்பிப் பார்க்கிறேன்** 5,6,9 ஆகிய அனுபவ புஸ்தகங்களில் எழுதியுள்ளேன். ஆகவே அவைகளை இப்போது மறுபடியும் விவரிக்க விரும்பவில்லை. கர்த்தர் ஒவ்வொரு நாளும் என் ஆவிக்குரிய நிலையை ஊழியத்தில் உயர்த்திக்கொண்டே இருந்தார். வருடங்கள் கடந்தன.

1968ல் திருநெல்வேலி சி.எஸ்.ஐ. டையோசிஸ் வாலிபர்கள் முகாமில் பேச குற்றாலம் என்ற இடத்துக்கு அழைக்கப்பட்டேன். அங்குதான் காடுகளுக்குள் தனியே ஜெபிக்க சென்றபோது இயேசுவின் இன்பச் சத்தத்தை கேட்டேன். கர்த்தர் என்னோடு பேசினார். அதன்பின் எனக்கு வந்த அம்மை வியாதியில் (Small Pox) படுக்கையில் இருந்தபோது இயேசுவை முகமுகமாய் கண்டடேன். இயேசுவின் சரீரம் ஆவியில் இருந்ததோ, மாமிசத்தில் இருந்ததோ நான் அறியேன். 1969ல் பரிசுத்தாவியின் நிறைவின் அனுபவத்தை கிருபையாக பெற்றேன். (இந்த குறிப்பிட்ட அனுபவங்களை விவரித்து பிறகு எழுதுவேன்)


## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# கவனிக்கவும்

என் வீட்டு (Land Line Phone) லேண்ட் லைன் போன் முழுவதும்

**நீக்கப்பட்டு விட்டது.**

இனி என்னோடு தொடர்புகொள்ள என்னுடைய மொபைல் (கைபேசி)

எண்ணோடு மட்டும் **9894261333** தொடர்பு கொள்ளவும்.

என்னிடம் **G-Pay** வசதி இல்லை என்பதையும் அறியவும்

**SEPTEMBER 2025**

# Printed Book (Periodical)


**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**

| | |
|---|---|
| **India** | **- Rs.60/** |
| **Foreign** | **- Rs.600/** |


**Return Requested:**


**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**



Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.